# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கியம்)

பகுதி : **கலைகள்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# கலைகள்

**ஓவியக்கலை**

- எல்லைகளையெல்லாம் கடந்து எங்கும் பரந்து வாழும் மக்கள் மணங்களைக் கொள்ளை கொண்டு வியக்க வைக்கும் விந்தைமொழி - ஓவியம்.
- கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் மக்கள் இனக்குழுக்களாக வாழ்ந்தனர்.
- தாம் தங்கிய மலைக்குகைகளிலும் பாறைகளிலும் வரைந்தவை - கோட்டோவியங்கள் ஆகும்.
- தமிழகத்தில் 25 இடங்களில் (மான்,போர்செய்தல்,விலங்குவேட்டை) குகை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- நாடக பாங்கிலான உணர்வுகளுக்கு இலக்கணம் வகுத்திருப்பது - தொல்காப்பிய மெய்ப்பாட்டியல்.
- கூத்தாட்டவைக் குழாத்தற்றே - குறள்.
- நாடகம் மேத்தும் நாடகக் கணிகை - சிலம்பு, இளங்கோவடிகள்.
- ஓவியங்களை முதலில் கண்ணெழுத்து என்றனர்.
- சங்ககாலத்தில் தாம் வரைந்த ஓவியங்களைகண்ணெழுத்து என்றே வழங்கியுள்ளனர்.
- தமிழில் எழுத்து என்பதற்கு ஓவியம் என்று பொருள் இருந்ததை கூறும் நூல்கள் - குறுந்தொகை, பரிபாடல்.
- பழங்கால மக்கள் தமது கருத்துகளை - சித்திர எழுத்துகளால் புலப்படுத்தினர்.
- ஓவியம் வரைய நேர்கோடு, கோணக்கோடு, வளைகோடு அடிப்படையாகும். அவ்வாறு வரையப்பட்டவை கோட்டோவியங்கள் எனப்படும். அதன் மேல் சிவப்பு,கருப்பு,மஞ்சள்,நீலம் முதலிய வண்ணங்கள் பூசப்பட்டன.
- நடுக்கல் வணக்கம் பற்றி கூறுவது - தொல்காப்பியம்.
- ஓவியக்கலை மறுபெயர்கள் - ஓவு,ஓவம்,ஓவியம்,சித்திரம்,படம்,படாம்,வட்டிகைச்செய்தி
- ஓவியர்களின் மறுப்பெயர்கள் - ஓவியர், ஓவியப் புலவன், கண்ணுள் வினைஞன், சித்திரகாரர்,வித்தகவினைஞன்,வித்தகர்,கிளவிவல்லோன்.
- ஓவிய நூலின் நன்கு கற்று புலமை பெற்றவர்களை - ஓவியப் புலவன்.
- நோக்கினார் கன்னிடத்தேதம் தொழில் நிறுத்துவோர் - நச்சினார்க்கினியர் கூறியது.
- ஓவியர் கலைஞர் குழுவை - ஓவியமாக்கள் என்றழைத்தனர்.
- ஆண் ஓவியர்கள் - சித்தராங்கதன்.
- பெண் ஓவியர்கள் - சித்திரசேனா.
- வண்ணந்தீட்டும் கோள் - தூரிகை, துகிலிகை, வட்டிகை.
- வண்ணம் குழப்பும் பலகைக்கு - வட்டிகை பலகை.
- ஓவியம் வரையப்பட்ட இடங்கள் - சித்திரக்கூடம்,சித்திரமாடம், எழுதுநிலைமண்டபம்,எழுதொழில் அம்பலம்

- ஆடல் மகள் மாதவி ஓவியச் செந்நூல் உரை நூற்கிடக்கையும் கற்றுத்துறைபோகப் பொற்றொடி மடந்தையாக இருந்தனள் எனக் கூறுவது - சிலப்பதிகாரம் .
- இறை நடனம் புரிய ஏற்படுத்தப்பட்டது - சித்திர சபை.
- "ஓவத்தனைய இடனுடை வனப்பு" - புறநானூற்றில் வீட்டின் அழகை ஓவியத்திற்கு ஒப்பவைத்துக் கவிஞர் போற்றுகிறார்.
- சுடுமண் சுவர்மீது வெண்குதை (சுண்ணாம்பு) பூசிச் செஞ்சாந்து கொண்டு - ஓவியங்கள் தீட்டினர்.
- மரப்பலகை,துணிச்சீலை,திரைச்சீலைகளில் ஓவியம் எழுதினர்.
- வண்ணங்கள் கவின்மிகு காட்சிகள் திட்டப்பட்ட திரைச்சீலைகள் ஓவிய எழினி எனப்பட்டன.
- நாடகமேடை திரைச்சீலைகள் ஓவியஎழினி என்றனர்.
- வண்ணங்கலவாமல் கரித்துண்டுகளால் ஓவியம் வரைவதை - புனையாஓவியம் என்றனர்.
- புனையா ஓவியங்கள் இன்று - மென்கோட்டு ஓவியமாக நடைமுறையில் உள்ளது.
- 12 ராசிகளையும், விண்மீன்களையும் வரைந்ததை கூறும் நூல் - நெடுநல்வாடை.
- மெய்பாடுகள் - வீரம், சாந்தம்,சினம்,வியப்பு,உவகை
- ஓவிய அளவுகள் - உத்தமம்,மத்திமம்,அதமம்,தசதாளம்,நவதாளம்,பஞ்சதாளம்.
- மறைந்து கொண்டிருந்த ஓவியகலைக்கு புத்துயிர் ஊட்டியவர்கள் - பல்லவபேரரசர்கள்.
- சித்திரகாரபுலி எனஅழைக்கப்பட்டவர் - முதலாம் மகேந்திரவர்மன்.
- தட்சிணசித்திரம் என்ற ஓவிய நூலுக்கு உரை எழுதியவர் - முதலாம் மகேந்திரவர்மன்.
- பனமலை,திருமலை,மாமல்லபுரம்,மாமண்டூர்,காஞ்சிகைலாசநாதர் கோயில்களில் காணப்படுவது - பல்லவர் காலஓவியங்கள் .
- சேரர் கால ஓவியங்கள் கிடைத்துள்ள இடம் - திருநந்திக்கரை.
- ஓவியக் கருவூலமாக போற்றத்தக்கது - சித்தன்னவாசல் ஓவியங்கள்.
- சித்தன்னவாசல் ஓவியங்கள் கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் அவனிபசேகர ஸ்ரீவல்லபன் என்ற பாண்டியர் காலத்தில் இளம்கௌதமன் இதனை வரைந்தார். இதில் தாமரைத்தடாகம், ஆடல் அணங்குகள், அரசன்,அரசிஓவியங்கள் உள்ளன.
- தஞ்சை பெரியகோயிலில் உள்ளஓவியங்கள் - சோழர் கால ஓவியங்கள்.
- தஞ்சை பெரியகோயில் 1987ல் யுனஸ்கோவின் பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்டது.
- சேரமான்,சுந்தரர் கயிலைசெல்லும் காட்சி,சிவபெருமான் முப்புரம் எரித்த காட்சி,மாமன்னன் இராசராசன்,கருவூர்த்தேவர் ஓவியங்கள் உள்ள இடம் - தஞ்சை பெரியகோயில்.
- திருவரங்கம்,தில்லை,திருப்பதி,திருவாரூர்,குடந்தை,மதுரை,காஞ்சி இடங்களில் உள்ளஓவியங்கள் - விஜயநகர, நாயக்கமன்னர் கால ஓவியங்கள்
- 18 ஆம் நூற்றாண்டில் தஞ்சை மராட்டிய மன்னர்களால் கண்ணாடியிலும், தந்தத்திலும் ஓவியங்கள் வரையப்பட்டு இரத்தினங்கள் பொதிக்கப்பட்டுள்ளன.

**பேச்சுக்கலை:**

- ❖ ஆயக்கலைகள் 64 ஆகும்.
- ❖ நுண்ணிய நூல் பல கற்றவர்க்கேஅமையத்தக்க அரியதொரு கலை - பேச்சுக்கலை.
- ❖ மேடைப்பேச்சுக்கு கருத்துகளே உயிர்நாடி.
- ❖ பேச்சின் முக்கூறுகள் - தொடக்கம், இடைப்பகுதி, முடி (அ) எடுத்தல், தொடுத்தல், முடித்தல்.
- ❖ சிறைச்சாலையில் செக்கிழுத்த துயரத்தை மாற்றியது என் செந்தமிழன்றோ! என்றவர் - ரா.பி. சேதுபிள்ளை.
- ❖ மேடைப் பேச்சுக்கு இலக்கணம் வகுத்தவர் - திரு.வி.க.
- ❖ பேசுவதைப் போலவே எழுதுவதும், எழுதுவது போலவே பேசுவதும் எனும் முயற்சியில் வெற்றிகண்டவர் - திரு.வி.க.
- ❖ மேடைப் பேச்சாளர்களில் சிறந்தவர்கள் -திரு.வி.க, ரா.பி. சேதுபிள்ளை,அறிஞர் அண்ணா.
- ❖ தமிழர் திருநாள் தை முதல் நாளாம் அமிழ்தென இனிக்கும் பொங்கல் திருநாள்.
- ❖ உழைப்பின் உயர்வை உணர்த்தும் பெருநாள் - முடியரசன்.

**திரைப்படக்கலை:**

- ❖ ஒளிப்படம் எடுக்கும் முறையினை கண்டுபிடிக்கப்பட்ட.ஆண்டு -1830.
- ❖ முதலில் ஓடும் குதிரையை இயக்கப்படமாக எடுத்தவர் - எட்வர்டு மைபிரிட்சு.
- ❖ படச் சுருள் உருவாக்கும் முறையைகண்டுபிடித்தவர் - ஈஸ்ட்மேன்.
- ❖ பார்க்கும் படக்கருவியைக் கண்டுபிடித்தவர் - எடிசன்.
- ❖ பிரான்சிஸ் சென்கின்சு என்றஅமெரிக்கர் 1894 ல் ரிச்மண்ட என்ற இடத்தில் இயக்கப்படத்தை பலரும் பார்க்கும் வகையில் வடிவமைத்தார். புதியபட வீழ்த்திகள் உருவாக இவரது கருத்துகளேஅடிப்படையாக இருந்தன.
- ❖ உலகப்போரின் போது ஆப்பிரிக்கா, ஐரோப்பாவில் பல படமெடுப்பவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.
- ❖ திரைப்படம் எடுக்க பயன்படும் படச் சுருள் செல்லுலாய்டு என்ற பொருளால் ஆனது .
- ❖ படம் எடுக்க பயன்படும் படச்சுருள் எதிர்ச்சுருள் எனப்படும்.
- ❖ 1 அடிநீளமுள்ள படச்சுருளில் 16 படங்களை எடுக்கமுடியும்.
- ❖ ஒரு நிகழ்வை மட்டும் எடுத்துக்கொண்டு அதைப்பற்றிய முழு விளக்கத்தையும் தருவது விளக்கப்படம் எனப்படும்.
- ❖ ஒளி,ஒலி படக்கருவி திரையரங்குகளில் திரைப்படம் காட்டப் பயன்படுகிறது.
- ❖ திரையரங்குகளில் உள்ள மூடியானது நொடிக்கு 8 முறை சுழலும். மூடியின் இரண்டு கைகள் நொடிக்கு 16 முறை சுழலும்.
- ❖ கருத்துப்படம் அமைக்கத் தொடங்கியவர் - வாலட் டிஸ்னி.
- ❖ படவகைகள் - கருத்துப்படம், விளக்கப்படம், செய்திப்படம், கல்விப்படம்
- ❖ சிற்பக் கலை சங்க காலம் முதலாகவே காணப்படுகிறது. சங்க காலத்தில் மண், மரம், தந்தம் முதலிய பொருட்களினால் சிற்பங்களை உருவாக்கினர்.
- ❖ சங்க காலத்தில் நடுகல்லில் உருவம் செதுக்கி வழிபட்டனர்.

- கல்லைக் குடைந்தும் செதுக்கியும் கோயில் கலையை வளர்த்த பல்லவர்கள், சிற்பக் கலையையும் வளர்த்தார்கள்.
- பல்லவர் காலத்தில் கோயில் சிற்பங்கள், திறந்தவெளி சிற்பங்கள் எனவும், புடைப்புச் சிற்பங்கள், தனிச்சிலைகள் எனவும் வளர்ந்தன.
- பல்லவர்கள் காலத்தில் தான் குடைவரைக் கோயில்கள் அமைக்கப்பட்டு சிற்பக்கலை நன்கு வளர்ச்சியுற்றது.
- பிள்ளையார்பட்டியில் காணப்படும் குடைவரைக் கோயிலே தமிழகத்தில் காணப்படும் பழமையான குடைவரக் கோயில் ஆகும்.
- யானையின் உருவத்தைச் செதுக்குவதில் பல்லவர் காலத்துச் சிற்பிகள் கைதேர்ந்தவர்கள் ஆவர்.
- சோழர் காலச் சிற்பங்கள் தனிச் சிறப்புடையன. அதனால் உலகெங்கும் உள்ள பொருட்காட்சிகளில் இடம் பெற்றுள்ளன.
- சோழ நாட்டை கலைகளின் விளைநிலம் என்று வர்ணிப்பதுண்டு.
- சைவம், வைணவம், சமணம், பௌத்தம், சிறு தெய்வ வழிபாடு என அனைத்துச் சமய தெய்வங்களுக்கும் சோழர் காலத்தில் சிற்பங்கள் வடிக்கப்பட்டன.
- கி.பி.7-ம் நூற்றாண்டு முதல் 13-ம் நூற்றாண்டு வரை சோழர்கள் சிறந்த ஆட்சி செய்தனர். இவர்கள் காலத்தில் சிற்பக்கலையும் வளர்ந்தது.
- கும்பகோணம், தக்கோலம், தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம் போன்ற இடங்களில் சோழர் காலச் சிற்பங்கள் உள்ளன.
- தொடக்கத்தில் கோயில் கட்டுவதற்கு முக்கியத்துவம் அளித்த சோழர்கள், பின் சிற்பங்களுக்கு முக்கியத்துவம் அளித்தனர்.
- மாமல்லபுரம் கடற்கரைக் கோயில், காஞ்சி கைலாசநாதர் கோயில் ஆகியவற்றை எழுப்பியவர்கள் பல்லவர்கள்.
- திருப்பத்தூர் திருத்தளி நாதர் கோயிலை எழுப்பியவர்கள் பாண்டியர்கள்.
- நார்த்தாமலை விசயாலய சோழீச்சுரம் ஆலயத்தை எழுப்பியவர்கள் சோழர்கள்.
- தஞ்சை இராசராசேச்சுரம் (பெருவுடையார் கோவில்), கங்கை கொண்ட சோழபுரம் கோவில், தராசுரம் ஐராவதீஸ்வரர் கோவில், திரிபுவனம் வீரேச்சுரம் போன்ற கோவில்கள், கோவில் கட்டிடக் கலையில் சிறந்து விளங்குகின்றன.
- மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் ஆயிரங்கால் மண்டபச் சிற்பங்கள், பேரூர்பட்டி பெருமாள் கோயிலின் கனகசபை, இராமேஸ்வரம் தூண் சிற்பங்கள் போன்றவை நாயக்கர்கள் காலத்தைச் சேர்ந்தவையாகும்.
- தந்தச் சிற்பங்கள் நாயக்க மன்னர்கள் காலங்களில் சிறப்புப் பெற்றிருந்தன. திருவரங்கத்தில் நாயக்க மன்னர், பட்டத்தரசி சிலைகள் உள்ளன.
- மதுரை அழகர் கோவிலில் சிறிய அளவிலான தந்தச் சிற்பங்கள் உள்ளன. மரச்சிற்பங்கள் கோயில் கோபுர வாயில் கதவுகளில் அதிகம் காணப்படுகின்றன.
- பல்லவர் கால மாமல்லபுரச் சிற்பத்தில் ஒற்றைப் பாறைச் சிற்பம் உலகப் புகழ் பெற்றதாகும். இதில் 153 சிற்பங்கள் காணப்படுகின்றன.
- கட்டிடக் கலையும், சிற்பக் கலையும் கொழிக்கும் ஊர் கும்பகோணம். கும்பகோணத்தின் தெற்கே உள்ள அரிசிலாற்றின் தென்கரையில் உள்ள ஊர் தாராசுரம்.

- ❖ தாராசுரத்தில் உள்ள கோவில் ஐராவதீஸ்வரர் கோயில். நூறு கோயில்களுக்குச் சென்று காணும் சிற்பங்களின் பேரழகை ஒரே இடத்தில் காட்டும் கோயில் ஐராவதீஸ்வரர் கோவில்.
- ❖ ஐராவதீஸ்வரர் கோயிலைக் கட்டியவர் இரண்டாம் இராசராச சோழன். ஐராவதீஸ்வரர் கோயில் தஞ்சை அரண்மனைக்குச் சொந்தமானது. இக்கோயில் யுனெஸ்கோவினால் மரபு அடையாளச் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- ❖ கலைகளின் புகலிடம் என ஐராவதீஸ்வரர் கோயில் சிறப்பிக்கப்படுகிறது.
- ❖ தாராசுரத்தில் முப்புரம் எரித்த சிவபெருமானின் சிற்பம் (திரிபராந்தகம்) உள்ளது.
- ❖ யானையைக் கொன்று அதன் தோலைத் தன் மீது உடுத்திக் கொண்டவர் கஜசம்ஹாரமூர்த்தி , அடிமுடி தேட வைக்கும் அண்ணாமலையார் லிங்கோத்பவர்.
- ❖ பரதநாட்டிய அடவுகள் குறித்த சிற்பங்களும் தாராசுரம் ஐராவதீஸ்வரர் கோயிலில் உள்ளன.
- ❖ ஐராவதீஸ்வரர் கோயிலின் நுழைவுவாயிலில் அமைந்த ஏழு கருங்கற்படிகள் சரிகமபதநி என்று ஏழு நாதப்படிகளாக வடிக்கப்பட்டுள்ளன. (மத்தளம் - லய ஒலி தாம்தரிகிட தீம்தரிகிட), (வீணை-மீட்டொலி), (புல்லாங்குழல்-கான ஒலி), (நாகசுரம்-நல்லொலி)
- ❖ 63 நாயன்மார்களின் கதையைக் கூறும் புடைச் சிற்பங்கள், தலைப்பில் கல்வெட்டு எழுத்துக்களுடன் காணப்படுகின்றன.
- ❖ தாராசுரம் கோவிலின் கூம்பிய விமானத் தோற்றமும் அதற்குக் கீழே இருபுறமும் யானைகளும், குதிரைகளும், பூட்டிய இரதம் போல் அமைந்த மண்டபமும் வான்வெளி இரகசியத்தைக் காட்டுகிறது- என்று கூறியவர் கார்ல்சேகன்.